தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விஜய, சித்திரை 3, திருவள்ளுவர் ஆண்டு—2044

2013 ஏப்ரல் 16, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அன்புற்று அமர்ந்த வழக்குஎன்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு."

உலகில் மகிழ்ச்சியுடன் வாழ்கிறவர்களின் உயர்வுக்குக் காரணமாய் விளங்குவது, அனைவரிடமும் அன்பு செய்து வாழும் வாழ்க்கையே ஆகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் வினா வரிசை எண் 225, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

225—

கருவூல அலுவலகக் கட்டடம்

***15285—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, மேலூர் கருவூல அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய*

[2013 ஏப்ரல் 16

பொற்பாதங்களை வணங்கி, தங்களின் அனுமதியோடு, திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், மதுரை மாவட்டம், மேலூர் தொகுதி, மேலூர் சார்நிலைக் கருவூல அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒப்புதல் அளித்ததன் அடிப்படையில், அதற்கான அரசாணை 15–11–2012 அன்று வெளியிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.*

திரு. ஆர். சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் கருவூல அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டுமென வினா எழுப்பப்பட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான பதிலைச் சொல்வதற்கு முன்பாகவே, அதற்கான ஒப்புதலை அளித்திருக்கிறார்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இந்திய அரசியல் வரலாற்றிலே இதுவரை இவர்போல் எந்தவொரு முதல்வரும் இருந்திருக்கவும் முடியாது, இனிமேல் எவரும் பிறக்கப் போவதும் கிடையாது என்பதற்கு எடுத்துக்காட்டாக மாண்புமிகு அம்மா அவர்கள் விளங்குகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் இந்தக் கேள்வியை அவையில் எழுப்புவதற்கு முன்பாகவே, மேலூர் தொகுதியிலுள்ள, மேலூர் கருவூல அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட நிதி ஒதுக்கிக் கொடுத்து, அனுமதி அளித்த, நாளைய இந்திய நாட்டை வழிநடத்தப்போகிற இந்தியாவில் இருக்கின்ற அனைத்து முதலமைச்சர்களிலும் சிறந்த முதலமைச்சராக, அனைவருக்கும் எடுத்துக்காட்டாக விளங்கும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மேலூர் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலூர் கருவூல அலுவலகத்திற்கான புதிய கட்டடத்தை இந்த ஆண்டே கட்டி, அதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கரங்களால் திறந்து வைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன். மேலும், கட்டடம் கட்டுவதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு*

செய்யப்பட்டுள்ளது; மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே கட்டடத்தைக் கட்ட நடவடிக்கை எடுப்பார்களா என்பதையும் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் சார்நிலைக் கருவூலத்திற்கு 244 சதுர மீட்டர் பரப்பளவில், ரூ. 55 இலட்சம் மதிப்பீட்டில் சொந்தக் கட்டடம் கட்ட, அரசாணை எண் 403, நிதித் (கருவூலக் கணக்கு–3) துறை, நாள் 15–11–2012 அன்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இக்கட்டடம் மேலூர் வட்ட அலுவலக வளாகத்தில், கிளைச் சிறைக்கு அருகில் கட்டப்படவுள்ளது. பொதுப் பணித் துறை மூலமாக 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்ததாரர்கள் யாரும் பங்கேற்கவில்லை. அதைத் தொடர்ந்து, மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, குறைந்த விலைப்புள்ளி கோரப்பட்ட ஒப்பந்ததாரருடன் பேச்சுவார்த்தை பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்ட நாளிலிருந்து 6 மாதத்திற்குள் பணி முடிக்கப்பெறும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள் சொன்னதுபோல, இவ்வருடத்திற்குள்ளேயே இக்கட்டடம் கட்டும் பணி நிறைவு பெறும் என்பதையும், மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கரங்களால் அக்கட்டடம் திறந்து வைக்கப்படும் என்பதையும் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.*

திரு. ஆர். சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே கட்டடத்தைக் கட்டி, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு மேலூர் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.*

[2013 ஏப்ரல் 16

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

முற்பகல் 10—05

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதியில் இருக்கக்கூடிய கருவூல அலுவலகம் நூறாண்டை எட்டக்கூடிய அளவிற்கு மிகவும் பழைமை வாய்ந்த ஓட்டுக் கட்டடத்தில் இயங்குகிறது. ஆகவே, மேற்படி கருவூலத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவினுடைய நல்லரசில் 2012—2013 ஆம் ஆண்டில் மட்டும் 14 சார்நிலைக் கருவூலங்களுக்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கூடிய விரைவில் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பரிசீலனைக்கு உட்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது உசிலம்பட்டி தொகுதியில் உசிலம்பட்டி கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் பழைய கட்டடமாக உள்ளது. அந்தக் கட்டடத்தில் தாலுகா கருவூலமும் இயங்கி வருகிறது. அந்தக் கட்டடம் 100 ஆண்டுகளுக்கும் மேலாக உள்ள பழமையான கட்டடம். ஆகவே, *உசிலம்பட்டி கோட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

2013 ஏப்ரல் 16]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவினுடைய நல்லரசில் புதிய சார்நிலைக் கருவூலங்கள் அமைக்க ஆணையிடப்பட்டு, அவை அனைத்திற்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த அலுவலகம் ஏற்கெனவே சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அந்தக் கட்டடத்தினுடைய உறுதித் தன்மையை உடனடியாக ஆய்வு செய்து அது உறுதியற்றதாக இருந்தால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று தீவிர பரிசீலனைக்கு உட்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரூர் தொகுதியிலே 100 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கக்கூடிய வட்டாட்சியர் அலுவலக வளாகத்திலே, வட்டாட்சியர் அலுவலகம், பத்திரப் பதிவுத் துறை அலுவலகம், சார்நிலைக் கருவூல அலுவலகம், அதற்கு அருகிலேயே சப்–ஜெயிலும் இருக்கிறது. இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்லவேண்டிய அவசியம் உள்ளதால் அசௌகர்யமாக உள்ளது. அந்தக் காலத்திலே இருந்த மக்கள் தொகை எண்ணிக்கைக்கு ஏற்ப கட்டப்பட்ட கட்டடம் அது. பல ஆண்டுகளுக்குப் பிறகு மக்கள் தொகை அதிகரித்திருக்கும்பட்சத்தில் அரூரிலே புதியதாக வேறு ஒரு இடத்திலே சார்நிலைக் கருவூலக் கட்டடத்தைக் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? இதேபோல தமிழகம் முழுவதிலும் 100 ஆண்டுகள் அல்லது 80 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கக்கூடிய கட்டடங்களுக்குப் பதிலாக புதிய கட்டடங்களைக் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா எனக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.